சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்.08.07.2025

ம.சா.1 – ஆனந்தகுமார் த.பெ – ரகுபதி

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

1) நான் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் கம்பெனியில் விற்பனை மேலாளராக உள்ளேன். நான் எதிர்மனுதாரர்கள் மீது என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் கடன் தொகை திரும்ப செலுத்தாததால் ஏற்பட்ட உத்தரவின் மீது நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளேன். 1ம் எதிர்மனுதாரர் எங்கள் நிறுவனத்தில் டாடா மேஜிக் என்ற நான்கு சக்கர வாகனத்திற்கு ரூ.5,50,000/- கடன் வாங்கினார். மேற்படி கடனுக்கு மாத தவணை ரூ.13,992/- செலுத்தினார். மொத்தம் 60 தவணைகளாகும். 1ம் எதிர்மனுதாரர் 13 தவணைகள் மட்டும் செலுத்தியுள்ளார். அப்போது எங்கள் நிறுவனத்தில் பணிபுரிந்த கள பணியாளர் கௌதம் என்பவர் 1ம் எதிர்மனுதாரரிடம் மாத தவணை தொகை பெற்று வருவார்.

2) 1ம் எதிர்மனுதாரர் எங்கள் நிறுவனத்தில் 16 மாத தவணை தொகை செலுத்தியுள்ளார் என்றும், ஆனால் நான் வழக்கிற்காக 13 மாதம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கள பணியாளர் கௌதம் என்பவரை அழைத்து வந்தால் 1ம் எதிர்மனுதாரர் 16 தவணைகள் செலுத்தியுள்ளார் களா அல்லது 13 தவணைகள் செலுத்தியுள்ளாரா என்று தெரியவரும் என்றால் சரியல்ல. கள பணியாளர் கௌதம் என்பவரை விசாரணை செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

3) TN95 C 2889 என்ற டாடா மேஜிக் வாகனத்திற்காக 1ம் எதிர்மனுதாரர் கடன் பெற்றிருந்தார். வாகனத்திற்கான தவணை தொகை செலுத்த இயலவில்லை என 1ம் எதிர்மனுதாரர் தானாக முன்வந்து வாகனத்தை என்னிடம் ஒப்படைத்தார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு தகவல் சொல்லி வாகனத்தை எடுத்து வந்தோம். வாகனத்தை எடுத்து வந்தது குறித்து 1ம் எதிர்மனுதாருக்கு நோட்டீஸ் கொடுத்துள்ளோம். மேற்படி நோட்டீசை இசைவு தீரப்பாயத்தில் தாக்கல் செய்துள்ளேன். இசைவு தீர்ப்பாயத்தில் உத்தரவு பிறப்பிக்கும் நபர் எங்கள் நிறுவனத்தின் மேல் அதிகாரி என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்தை ரூ.3,50,000/—க்கு ஏலம் விட்டோம். மேற்படி ஏல தொகை குறித்து 1ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளோம். இசைவு தீர்ப்பாயத்தின் உத்தரவில் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, ஆவணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏலம் எந்த தேதியில் விடப்பட்டது என்றால் ஆவணங்களை பார்த்தால் தெரியும். ஏலம் விடப்பட்டது குறித்து எங்கள் தரப்பில் அனுப்பப்பட்டதாக சொல்லும் அறிவிப்பினை எதிர்மனுதாரர் பெற்றதாக எந்த ஆவணமும் தாக்கல செய்யவில்லை என்றால் சரியல்ல.

4) 1ம் எதிர்மனுதாரர் வாகனம் புதிய வாகனம் என்பதால் ரூ.4,60,000/—க்கு ஏலம் விடப்பட்டது என்றும் அதை மறைத்து ரூ.3,50,000/—க்கு ஏலம் விடப்பட்டதாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்தை ஏலம் எடுத்த நபரை விசாரித்தால் ஏல தொகை விபரம் தெரியவரும் என்றால் சரிதான்.

மேற்படி நபரை எங்கள் தரப்பில் விசாரிக்க தயாராக உள்ளேன் என்றால் ஏல எடுத்த நபர் குறித்த விவரத்தை கொடுப்பதற்கு தயாராக உள்ளேன்.

5) 1ம் எதிர்மனுதார் செலுத்த வேண்டிய தொகை வாகனத்தை ஏலம் விட்டதின் மூலம் முடிவடைந்து விட்டது என்றும், அதற்கான NOC ஐ களபணியாளர் கௌதம் விரைவாக கொடுத்து விடுவதாக கூறினார் என்றும் NOC கொடுக்காமல் வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. 13 மாத தவணை தொகை மற்றும் ஏல தொகையுடன் ரூ.5,27,000/- மேற்படி வாகனத்திற்காக செலுத்தப்பட்டுள்ளது. 2023ம் வருடம் தாக்கல் செய்யப்பட்ட நிறைவேற்றுதல் மனுவில் ரூ.3,47,807.87/-க்கு கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அசல் ரூ.5,50,000/- மற்றும் வட்டி தொகை ரூ.3,95,207/- பாக்கி இருந்தது. எங்கள் நிறுவனத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் எந்த பணமும் செலுத்தவேண்டியதில்லை என்றும் 1ம் எதிர்மனுதாரர் மீது வேண்டுமென்றே இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறார்.

6) விருதுநகரில் 1ம் எதிர்மனுதாரர் தொழில் செய்து வருகிறார், எந்த பகுதி என்று குறிப்பாக தற்போது தெரியவில்லை. 1ம் எதிர்மனுதாரர் தற்சமயம் மதுரையில் வசித்து வருகிறார் என்றும், 1ம் எதிர்மனுதாரருக்கு உள்ள கடன் மற்றும் சொத்து பற்றிய விபரங்கள் நிரூபணம் செய்யாததால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரிடம் கூடுதலாக ரூ.25,000/- எங்கள்நிறுவனத்தினால் வசூல் செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி தொகையை அவருக்கு திருப்பி

செலுத்த நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.